**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,</u>**

**<u>SIRKALI</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.310/2018**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | சாமிநாதன் | Prosecution | LW-8 as PW-4 |
| Father Name | கோவிந்தராஜன் | Defence | |
| Station | AKC PS. | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 59/2025 |

Solemnly affirmed by Tmt.K. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

**09.10.2025 எதிரி ஆஜர்**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது ஆனைக்காரன் சத்திரம் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு சமயத்தில் பணிபுரிந்து உதவி ஆய்வாளர் புஷ்பலதா அவர்களது கையெழுத்தும் கையொப்பமும் நான் நன்கு அறிவேன். ஆவணங்களின் அடிப்படையில் நான் அவருக்காக கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 06.02.2018 ம் தேதி உதவி ஆய்வாளர் புஷ்பலதா நிலைய பொறுப்பில் இருந்த போது மருத்துவர் ராஜாமணி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று ஆனைக்காரன் சத்திரம் காவல் நிலைய குற்ற எண்.53/2018 இதச பிரிவுகள் 294b, 353, 506(ii)ஆக வழக்கு பதிவு செய்துள்ளார். அந்த **முதல் தகவல் அறிக்கை அசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 2018 ம் தேதி** 16.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ராஜேந்திரன் மற்றும் பொட்டு ராஜா மகன் ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வை இட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். மேற்படி ஆவணங்கள் **அசாஆ.3 மற்றும் அசாஆ.4ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலானவர்கள் தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் வழக்கின் எதிரியை தேடிய நிலையில் எதிரி மேண்மைமிகு மாவட்ட நீதிமன்றம் நாகப்பட்டினத்தில் முன்பினை பெற்றிருந்ததால் அவரை கைது செய்யவில்லை.பின்னர் வழக்கின் புலன் விசாரணையை முடித்து 02.03.2018 ம் தேதி எதிரிக்கு எதிராக இதச பிரிவுகள் 294b, 353, 506(ii) கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் ஆவணத்தின் அடிப்படையில்தான் சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரிதான். சம்பவம் நல்லூர் மருத்துவ மனையில் இரவு 7.30 மணிக்கு தான் நடந்தது என்றால் 23.00 மணிக்கு நடந்தது. சம்பவம்நடந்த அன்று எதிரி நல்லூர் அரசு மருத்துவ மனை க்கு இரவு 7.30 மணிக்கு தமிழ்தாசன் என்பவரை சிகிச்சைக்கு அழைத்து வந்து அதற்கு அசா.1 சிகிச்சை செய்தார் என்றால் சரிதான். அன்றைய தினம் மருத்துவ வருகை பதிவேட்டில் அசா்.1 மற்றும் அசா.2 இரவு 8.00 முதல் காலை 8.00 வரை பணியில் இருந்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

சம்பவம் நடந்து மறுநாள் மாலை 4.00 மணிக்கு கால தாமதமாக புகார் கொடுத்தார்கள் என்றால் சரிதான். எங்கள் முதல் தகவல் அறிக்கை வரிசை எண் 8ல் கால தாமதம் பற்றி ஏதேனும் குறிப்பிட்டுள்ளோமா என்றால் இல்லை . நாங்கள் தாக்கல் செய்துள்ள மருத்துவமனை வருகை பதிவேட்டில் ப.சா. 3 மற்றும் ப.சா.4 Dr.விக்னேஷ்வரன் மற்றும் Dr.ஆனந்த் ஆகியோர்கள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அவர்கள் பணிக்கு வரவில்லை என்றால் சரியல்ல. FIR யில் எதிரி தமிழ்தாசன் என்பவரை அன்றைய தினம் சிகிச்சைக்கு அழைத்து வந்தார் என்று குறிப்பிடபட்டதற்கு ஏதேனும் ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படடுள்தா என்றால் இல்லை.

சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்தின் அருகில் உள்ளவர்கள் யாரையும் எனது சாட்சி பட்டியலில் குறிப்பிடப்படவில்லை என்றால் இல்லை. எதிரியின் உடன் பிறந்த அக்காதான் ஊராட்சி மன்ற தலைவி என்றால் சரிதான். அரசியல் எதிரிகளின் தூண்டுதலின் பேரில் தான் புகார்

கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் சம்பவ இடம் சென்று சரிவர விசாரணை செய்து தான் வரைபடம் தயார் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் சம்பவ இடத்தில் வரைபடம் தயார் செய்யவில்லை என்றாலும் காவல் நிலையத்தில் வைத்துதான் தயார் செய்தேன் என்றாலும் அதனால் தான் சாட்சி பிறழ் சாட்சியாக சாட்சியமளித்துள்ளது என்றால் சரியல்ல. அது போல ஒரு சம்பவம் நடைபெறவில்லை என்றாலும்பொய்யான குற்றப்பத்திரிக்கை தாக்கல்செய்து பொய் வழக்கு போடப்பட்டது என்றால் சரியில்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை.**